Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருவேள்விக்குடி கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் வரலாறு மற்றும் கலை

## Art and History of Thiruvelvikudi Kalyanasundareswara Temple

**ச.பாப்பாசெல்வம் & முனைவர் வே.லதா**
**சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.**

4

**ஆய்வு நோக்கம்:**

திருவேள்விக்குடி கல்யாணசுந்தரேஸ்வரர் கோவில் கல்வெட்டுகள் கட்டட மற்றும் சிற்பங்கள் வழியாக இக்கோயிலின் வரலாறு, கலை, அரசியல், ஆன்மீகம் போன்றவற்றையும் இளம் தலமுறையினர் அறிந்து கொண்டு இம்மண்ணின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் கலைகளை போற்றப்பட வேண்டும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**ஆய்வுச் சுருக்கம்:**

திருவேள்விக்குடி கல்யாணசுந்தரேஸ்வரர் கோவில் சோழ மன்னன் ஆதித்த சோழன் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோயிலில் சோழர் கால சிற்பங்கள், கல்வெட்டுகள் மிகத் தெளிவாகவும் நுணுக்கங்கள் நிறைந்த வேலைபாடுகளுடன் அமைந்திருக்கிறது. இதில் இக்கோயிலின் வரலாறு, சிற்பக்கலை, மண்டபங்கள், கட்டடக்கலை மற்றும் கல்வெட்டுச் செய்திகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஆதாரத்தை கொண்டு இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.

**திறவுச்சொற்கள்:**

கலை, வரலாறு, திருவேள்விக்குடி கல்யாணசுந்தரேஸ்வரர் கோவில், குத்தாலம், மயிலாடுதுறை மாவட்டம்

**முன்னுரை:**

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலத்திலிருந்து வடக்கே 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது திருவிளக்குடி என்றழைக்கப்படும் பண்டைய திருவேள்விக்குடி என்னும் தேவாரப் பாடல்பெற்ற தலம். முற்காலத்தில் இது **“குறுக்கை நாட்டு விடேல்விடுதி சதுர்வேதி மங்கலத்தில்”**[1] இருந்தமை கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. இன்று கடலங்குடி என்ற கிராமத்தில் அடங்கிய ஒரு சிற்றூராகத் திருவேள்விக்குடி விளங்குகிறது. “திரு” என்பது பாடல் பெற்ற தலங்களின் பெயர்களுக்கு முன்பாக வைக்கப்படும் அடைமொழி ஆகும்.[2] காவிரி ஆற்றின் வடகரையில் உள்ள 23ஆவது சிவஸ்தலம் திருவேள்விக்குடி ஆகும். தலபுராணங்களில் இவ்விறைவனுக்கு கௌதகேஸ்வரர்,[3] கல்யாணசுந்தரேஸ்வரர், மணவாளேஸ்வரர் என வேறு பெயர்களும் உண்டு. கல்வெட்டுகளில் இத்தலத்து இறைவன் திருவேள்விக்குடி ஆழ்வார்,[4] திருவேள்விக்குடி உடையார்,[5] மங்கல நாயகர்,[6] ஸ்ரீகோயில் தேவர்,[7] மணவாள நம்பி,[8] திருவேள்விக்குடி உடைய மகாதேவர்,[9] திருக்கற்றளி மகாதேவர்[10] என்னும் திருப்பெயர்களில் அழைக்கப்படுகிறார். இறைவி திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார், நறுஞ்சாந்து இளமுலை நாச்சியார் என்றும் திருப்பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.

இக்கோயில் தஞ்சையை ஆட்சி செய்த சோழமன்னன் முதலாம் ஆதித்தன் காலத்தில் (கி.பி 907-971) கற்றளியாக எழுப்பப்பெற்று மன்னன் உத்தமசோழன் காலத்தில் (கி.பி 971-987) திருப்பணியைப் பெற்றுள்ளமையைக் கல்வெட்டுகளால் நாம் அறிய முடிகிறது.[11] அதன்பிறகு முதலாம் இராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், விக்கிரமசோழன் போன்ற மன்னர்களின் கல்வெட்டுகளும் இக்கோயிலில் உள்ளன.

திருஞானசம்பந்தர் தமது பதிகத்தில் திருத்துருத்தி என்றழைக்கப்படும் குத்தாலத்தையும் திருவேள்விக்குடியையும் (திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்) சேர்த்து மூன்றாம் திருமுறையில் '**ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனல்'**[12] எனத் தொடங்கும் பாடலோடு மொத்தம் 11 பாடல்களும், சுந்தரர் பாடிய

ஏழாம் திருமுறையில் '**மூப்பதும் இல்லை, பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை'**[13] எனத் தொடங்கும் பாடலோடு மொத்தம் 10 பாடல்களும், சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தில் 190ஆவது பாடலாக இடம்பெறும் '**மேவுபுனல் பொன்னி இருகரையும் சேர்த்து'**[14] என்ற பாடலும், 121ஆவது பாடலாக இடம்பெறும் '**எத்திசையும் தொழுதுஏத்த மத்தயானை**'[15] 290ஆவது பாடலாக இடம்பெறும் **'அப்பதி போற்றி அகல்வார்'**[16], 291ஆவது பாடலாக இடம்பெறும் '**செழும் திருவேள்விக்குடியில்**'[17] எனத் தொடங்கும் பாடல்கள் போன்றவை இத்திருதலத்தோடு தொடர்புடையவை. இத்தலத்தில் இறைவன் பகலில் திருத்துருத்தியிலும் (குத்தாலம்) இரவில் திருவேள்விக்குடியிலும் எழுந்தருளியிருப்பதாகத் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் கூறுகின்றது. இறைவன் மணக்கோலத்துடன் விளங்கும் தலமாகும்.

**தலபுராணம்**:

இறைவன் வாக்களித்தப்படி இறைவன் மணமகனாக எழுந்தருளித் திருமணம் புரிந்த தலம் திருவேள்விக்குடியாகும். இவ்வூர்க் கோயில் எதிரில் உள்ள கௌதுகாபந்தனத் தீர்த்தம் எனும் திருக்குளத்தில் இறைவனும், இறைவியும் நீராடி சகல தோஷ நீக்கத்திற்காக வேள்வி செய்தபிறகு, பிரம்மன் அக்கினி முன்பு வேள்வி யாக்க, இறைவனும் இறைவியும் திருமணம் செய்துகொண்ட தலம். அம்பிகைக்குத் திருமணக் கங்கணம் அணிவித்து, பிரம்மன் வேள்விகள் செய்து திருமணத்தை நடத்தி வைத்தார். தேவியின் திருமண தலமாதலின் இறைவி ஆனந்தத்தில் புன்னகை பூத்த வண்ணம் அருள் பாலிக்கிறாள். இறைவன் **'மணவாளேஸ்வரர்' எனவும் 'கல்யாணசுந்தரேஸ்வரர்'** எனவும் அழைக்கப்பெறுகிறார். தெய்வத் திருமணம் நடந்த தலமாதலின் திருமணத் தடை நீங்கும் பிரார்த்தனைத் தலமாகவும் விளங்குகிறது.

அரசகுமாரன் ஒருவனுக்கு உறுதி செய்திருந்த பெண்ணின் திருமண நிகழ்விற்கு முன்னரே அவளுடைய பெற்றோர் இறந்ததால் அவளது சுற்றத்தார் அரசகுமாரனுக்கு மணம் முடிக்க மறுத்து விட்டனர். அரசகுமாரன் இத்தலத்து இறைவனை நோக்கி தவம் புரிந்தான். சிவபெருமான் பூதத்தைக் கொண்டு அப்பெண்ணை எடுத்து வரச்செய்து அரசகுமாரனுக்கு மணவேள்வி செய்தருளினார் என்றும் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சியை நினைவுறுத்தும் விதமாக கோயில் கருவறைப் புறச்சுவரில் அரசகுமாரன் ஒருவன் இறைவனை வழிபடும் புடைப்புச்சிறபம் ஒன்று

காணப்படுகிறது. எனவே இச்சிற்பம் இக்கோயிற் தலபுராணத்தை அடிப்படையாக கொண்டதாக மக்கள் கருதுகிறார்கள். இப்புடைப்புச் சிற்பத்தை வரலாற்றுப் பார்வையில் உற்று நோக்குவோமேயானால் லிங்க வடிவத்தின் முன் அஞ்சலித்து நிற்கும் இவ்வரச உருவம் தலபுராணத்தைத் தழுவி தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுவதை விட இக்கோயிலை கற்றலியாக மாற்றிய முதலாம் ஆதித்த சோழனாகவோ அல்லது கண்டராதித்த சோழன்-செம்பியன்மாதேவியின் மகன் உத்தம சோழனாகவோ இருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது. இச்சிற்ப வடிவத்தில் உருவ அமைதி, நிற்கும் நிலை, முகப்பொலிவு, தலைக்கோளம், அங்கங்களின் அமைப்பு, ஆட அணிகலன்களின் தன்மை யாவும் முக்கியமானது. இச்சிற்ப வடிவம் கி.பி 9-10ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் கருதலாம்.

**கட்டடக்கலை**:

திருவேள்விக்குடி கல்யாணசுந்தரேஸ்வரர் கோயிற் கருவறை கிழக்கு திசையை நோக்கி சதுர வடிவத்தில் அமைந்துள்ளது. கருவறையின் நடுவே சதுர வடிவிலான ஆவுடையார் மீது செங்குத்தாக அமைந்துள்ள சிவலிங்கம் மணவாளேஸ்வரர் என்னும் பெயரில் தற்போது வழிபாட்டில் உள்ளது.

கருவறையின் மேல் விதானம் மூடப்பட்டு திருநிலைவாயில் செவ்வக வடிவில் கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. பொதுவாக இடை மற்றும் பிற்காலச் சோழர் கோயில் நிலைவாயில்களின் பக்கங்களில் மணிபந்தங்களும் மூலைகளில் இதழ் வரிகளும் காணப்படுவதுண்டு. இது முந்தைய சோழர் கட்டட கலைப்பாணியை அடையாளம் காண மிகவும் துணைபுரிகிறது.

கருவறை வாயிலைச் சற்று முன்னோக்கி இருபுறமும் சதுர வடிவுடைய இரு அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்கள் கால், இடை, கலசம், தாடி, குடம், பத்மம், பலகை, வீரகண்டம், போதிகை ஆகிய உறுப்புகளை பெற்றுத் திகழ்கின்றன. இத்தூண்களின் பக்கங்கள் சட்டத்தலையுடன் அமைந்து விளங்க காண்கிறோம். அரைத்தூண்களும் சட்டத்தலையும் வேலைபாடுகளின்றி மிக எளிமையாகச் செதுக்கப் பெற்றுள்ளன. கருவறை வாயிலின் மேல்முகப்பிலும் கஜலட்சுமி போன்ற சிற்ப வடிவங்கள் காட்டப்படாது மிக எளிய முறையில் திகழ்கின்றது. இக்கோயிலின் கருவறையில் உட்புற அமைப்பும் மேல் விதானமும், திருநிலைவாயிலும், நிலைக்கால்களும் அதன் பக்கச் சுவர்களும், அரைத்தூண்களும், வாயில் முகப்பும் முந்தைய சோழர் காலக் கட்டிடக் கலைப்பாணியில் அமைந்துள்ளன. விஜயாலயன் மற்றும் ஆதித்தச் சோழனுடைய கோயிற் கட்டிடக் கலை மரபின் சற்று வளர்ச்சி அடைந்த நிலையினை இங்கு காண முடிகிறது. இங்குள்ள அரைத்தூண்கள் ஒவ்வொன்றும் கால் முதல் போதிகை மட்டம் வரை சுமார் 2 மீட்டர் உயரமுடையவையாக காணப்படுகிறது.

**விமானம்:**

பொதுவாக பல்லவர் காலத்தில் கோயில் அமைப்பில் விமானம் உயர்ந்தும் கோபுரம் சிறிய வடிவிலும் கட்டப்பட்டன[18]. எடுத்துக்காட்டாக **மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலையும்,**

**காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலையும், பனைமலை தாளகிரீஸ்வரர் கோயிலையும்** காணலாம்.

சோழ மன்னர்கள் காலத்தில் கோயிற் கட்டடக் கலை தமிழகத்தில் உன்னத வளர்ச்சி அடந்தது எனலாம். ஒன்று முதல் பல தளங்கள் உடைய விமானங்கள் இக்காலக்கட்டத்தில் காண முடிகிறது. கோயில் விமானங்கள் போகம், பத்ரம், விசாலம், அவஸ்திகம், கரம், கண்டம், துங்கானை விமானம், சுத்த விமானம், விருத்தம், கல்யாணசுந்தர விமானம், கோசல விமானம், பத்ய பத்ர விமானம், கந்த விமானம் என 13 வகைப்படும். மேலும் விமானத்தின் உயர அமைப்புகளைக் கொண்டு சாந்திகம், பௌஷ்டிகம், ஜெயதம், அற்புதம், சார்வ சாமிகம் என 5 வகைகளாகப் பிரிக்கலாம்[19]. தமிழகத்துக் கோயில் விமானம் என்பது பொதுவாக 6 அங்கங்களைக் கொண்டிருக்கும் . எனவே அது “ஷடங்க” விமானம் என அழைக்கப்படும்[20].

விமானத்தின் 6 அங்கங்களாவன,

1. அடித்தளம் – அதிட்டானம்
2. சுவர் – பித்தி
3. கூரை – பிரஸ்தரம்
4. கழுத்து – கிரீவம்
5. தலை – சிகரம்
6. முடி (அ) குடம் – ஸ்தூபி

**அர்த்த மண்டபம்:**

கருவறையின் முன்புறம் செவ்வக வடிவில் அர்த்த மண்டபம் அமைந்து கீழ்-மேலாக நீண்டுள்ளது. இம்மண்டபத்தை இரு வரிசைகளில் வரிசைக்கு இரண்டு தூண்கள் வீதம் நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. தூண்கள் ஒவ்வொன்றும் சுமார் 2 மீட்டர் உயரமுடையவை. அர்த்த மண்டபம் வாயில் செவ்வக வடிவில் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாகக் கருவறை அல்லது அர்த்த மண்டப நிலைக் கால்களில் அந்நிலைவாயிலைத் தோற்றுவித்தோனின் பெயர் விவரங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இங்கு அத்தகைய கல்வெட்டுகள் ஏதுமில்லாமல் எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டப நிலைவாயில் கருவறை நிலைவாயிலைவிட உயர்ந்தும் அகன்றும் காணப்படுகிறது. அர்த்த மண்டப வாயிற் சுவரின் வடக்கிலும், தெற்கிலும் இரு மாடங்கள் வெட்டப்பட்டு சுவற்றில் துவாரபாலகரின் பெரிய சிற்ப வடிவங்கள் பொருத்தப்பட்டுள்ளன. வடதிசை மாடத்தை அலங்கரிக்கும் துவாரபாலகரின் உருவம் வலதுகாலைத் தரையில் ஊன்றி, இடதுகாலைப் பொந்துள்ள மரக்கிளையின் மீது பொருந்தியுள்ளது. அம்மரப்பொந்தின் வழியாக வெளிப்படும் நாகம் பெரிய விலங்கு ஒன்றினைத் தன் வாயால் கவ்வி நிற்கிறது. துவாரபாலகரின் இடக்கரம் மரத்தண்டின் மேல்முனையில் சாய்ந்த வண்னம் அமைய, வலக்கரம் விஸ்மய முத்திரை காட்டி வியக்கும் கரமாக அமைந்துள்ளது. **‘மஹாகாளனை செய்வித்தான் தென்கரை நாட்டு’** எனத் தொடங்கும் கல்வெட்டு வரிகளில் தென்கரை நாட்டு ஆனியமுடையான் காரி வெப்பனாகிய கரிகால கன்ன மூத்த வேளாண் என்பவர் மஹாகாலன் என்ற துவாரபாலகரைச் செய்தளித்தான் என்று கூறுகிறது.

1. மஹாகாளனை செய்வித்தாந்தென்கரை நா
2. ட்டு ஆனியமுடையான் காரிவெப்பனா
3. கிய கரிகால கன்ன மூத்தவேளாந்[21]

தென்திசை மாடத்தில் உள்ள துவாரபாலகரின் மற்றொரு உருவம் பெருத்த கதாயுதத்தின் மீது வலதுகாலைத் தூக்கி நிறுத்திய நிலையில் இடதுகாலைத் தரையில் ஊன்றியப்படி இரு கரங்களுடன் காட்சியளிக்கிறது. இதன் வலக்கரம் தர்ஜன்ய முத்திரைக் காட்டும் நிலையில் எச்சரிக்கும் கரமாகவும் இடக்கரம் கதாயுதத்தின் மீது பொருந்தியப் படியும் அமைந்துள்ளன. இவ்விரு துவாரபாலகர்களின் உயரங்களுக்கு ஏற்ப அர்த்த மண்டப மாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டப வாயிலின் மேற்முகப்பு தெய்வ உருவங்கள் ஏதும் பொறிக்கப்படாமல் எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

அர்த்த மண்டப புறச்சுவரின் தெற்கிலும், வடக்கிலும் தேவகோட்ட மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தென்புற மாடத்தில் நடராஜர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. **கோனேரி ராஜபுரம்**[22], **திருமணஞ்சேரி**[23],ஆகிய ஆலயங்களைப் போன்று அர்த்த மண்டபச் சுவர்களில் நடராஜர் வடிவத்தை பொருத்தும் வழக்கத்தினை இங்கும் பின்பற்றியுள்ளனர். உமையுடன் மணக்கோல நாதராகத் தோன்றும் சிவபெருமானின் முன்புறம் விஷ்ணு, இந்திரன் போன்ற தேவர்களும் மேலே கின்னரர், கிம்புருர்களும் காட்சியளிக்கின்றனர். சிவபெருமானின் இம்மணவேள்வியை நான்முகம் நடத்தி வைக்கிறார். இக்காட்சியை தேவர்களும், பிறரும் கண்டு களிக்கின்றனர். தேவகோட்ட மாடத்தில் உள்ள இத்தகைய நுட்பமான சிற்பக் காட்சிகள் கட்டடக்கலையுடன் இணைந்து நிற்கின்றன. நடராஜர் உள்ள தேவகோட்டத்தில் இருபுறமும் அகத்தியரும், கிழக்கில் இடம்புரி விநாயகரும் சிறு மாடங்களில் பொருத்தப்பட்டுள்ளனர். அகத்தியருக்கு கிழக்கு திசையில் உள்ள சுவரில் லிங்க பூசை செய்யும் மன்னனின் உருவம் ஒன்று புடைச்சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டப வடதிசைக் கோட்டத்தில் விஷ்ணு துர்க்கையின் உருவம் பொருத்தப்பட்டுள்ளது. இக்கோட்டத்தில் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள சுவர்ப்பகுதிகளில் முறையே பிட்சாடனார் மற்றும் சண்டேச அனுக்கிரக மூர்த்தி ஆகிய சிற்ப வடிவங்கள் காணப்படுகிறது. இதனை **ஆதித்த சோழன், பராந்தக சோழன், செம்பியன்மாதேவி, சுந்தரசோழன்** ஆகிய அரச மரபினர் காலத்து கோயில்களில் காணமுடிகிறது.

**மகாமண்டபம்**:

அர்த்த மண்டபத்தின் முன்னுள்ள மகாமண்டபம் சதுர வடிவமுடையது. இம்மண்டபத்தின் வடக்கிலும், தெற்கிலும் வரிசைக்கு நான்கு தூண்கள் வீதம் இரு வரிசைகளில் 8 தூண்கள் அலங்கரிக்கின்றன[24]. மகாமண்டபத்தில் வடபுறத்தில் நடராஜர் சபையும், உக்கிராண அறையும் உள்ளன. மகாமண்டப வாயில் கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. மகாமண்டபத்தின் வடதிசையில் நடராஜர் சபை அமைந்துள்ளது. இது தென்திசை நோக்கி காணப்படுகிறது. இச்சபை நீள்சதுர வடிவமுடையது. கல்யாணசுந்தரர் சன்னதி மகாமண்டபத்தை ஒட்டி திருச்சுற்றின் தென்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**முகமண்டபம்:**

மகாமண்டபத்தின் முன்புறம் பரந்து விரிந்து காட்சியளிக்கிறது முகமண்டபம். இம்முகமண்டபம் சதுர வடிவமானது. இந்த முகமண்டபத்தை கிழக்கு மேற்காக ஐந்து வரிசையில் 24 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இதில் 20 தூண்கள் சித்திரக்கால் வகையைச் சார்ந்தவை. முகமண்டபத்தை அலங்கரிக்கும் சித்திரத் தூண்களும் அணியொட்டித் தூண்களும் கி.பி 11-12ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த தூண்களாகக் கருத முடிகிறது[25]. முகமண்டபத்தின் வடகிழக்கு மூலையில் உள்ள மேடை மீது பைரவர், சூரியன் ஆகிய பரிவார தெய்வங்களைச் சிற்ப வடிவில் காண்கிறோம். முகமண்டபத்தின் தென்மேற்கு மூலையை ஒட்டி துவார கணபதி, தம்ப விநாயகர், அப்பர், சம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகிய நாயன்மார்களின் இறை வடிவங்கள் உள்ளன.

**நந்தி மண்டபம்:**

முகமண்டபத்தின் முன்புறம் நந்தி மண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது. சிறிய இம்மண்டபத்தைச் சதுர வடிவடைய நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்களின்

மேற்பகுதியில் பிரஸ்தரமும், அதன் மீது ஏகதளத்தையுடைய எண்பட்டை திராவிட சிகரமும், ஸ்தூபியும் அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தின் நடுவே உள்ள கற்பீடத்தில் இறைவனது சன்னதியை நோக்கிய வண்ணம் அமர்ந்துள்ள நந்தியின் சிற்ப வடிவத்தைக் காணலாம். இது முந்தைய சோழர் காலத்தைச் சார்ந்த உருவில் சிறிய நந்தி வாகனத்தின் படைப்பாக உள்ளது.

**இராஜகோபுரம்:**

'கோ' என்பது இறைவனையும், அரசனையும் குறிக்கும் சொல். 'புரம்' என்று கோட்டை அல்லது மதில் என்ற பொருளைத் தரும்[26]. பணியை அரசர்கள் கோயிலைச் சுற்றிலும் மதில் எடுத்து ஒரு புறம் பெரிய வாயிலமைத்து அவ்வாயிலின்மேல் எழுப்பப்படும் கோபுரத்திற்கு "ஸ்தூபி லிங்கம்" என்று பெயர்[27]. இதனை அரச கோபுரம் அல்லது இராஜகோபுரம் என்பர். கிழக்கு வாயிலின் மேல் மூன்று நிலைகளுடன் அமைந்து மேலே போகப்போக குறுகியும் நீண்ட சதுர வடிவமாய் அமைந்து காணப்படுகிறது. கோபுர சிற்பத்தின் மூலைகளில் உள்ள வேதிப்படையில் இரு நந்தி வாகனங்கள் சுதைச் சிற்பங்களாக அமைந்து அலங்கரிக்கின்றன. உச்சியில் சிகரம் நீண்ட வண்டிக் கூட்டினைப் போன்ற அமைப்புடன் விளங்குகிறது. இதனைச் சிற்ப முறையில் 'பண்டியில்' என்று கூறுவர்[28].

**திருச்சுற்று:**

சுமார் 40 மீட்டர் நீளம் 11 மீட்டர் அகலமுடைய இத்திருச்சுற்றுப் பிரகாரத்தை மாளிகை பத்தி எழுப்புவதற்குரிய அடித்தளம் மட்டும் எழுப்பப்பட்டுள்ளது. இத்திருச்சுற்றுப் பாதையில் கணபதி, சுப்ரமணியர், மகாலெட்சுமி, சண்டிகேசுவரர் ஆகிய பரிவார ஆலயங்களையும், பரிமள சுகந்த நாயகி அம்மன் கோயிலையும் காணலாம். இத்திருச்சுற்றின் பின்புறம் திருக்குளம் ஒன்று உள்ளது. இது முற்காலத்தில் இறைவனுக்கு திருமண வேள்வி நடந்த இடமாகக் கருதப்படுகிறது[29].

**கல்வெட்டுச் செய்திகள்:**

திருவேள்விக்குடிக் கல்வெட்டுகள் பலவகையிலும் வரலாற்று முக்கியத்துவமும் புகழும்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

வாய்ந்தவை. இக்கோயிலில் ஏறத்தாழ **52 கல்வெட்டுகள்** உள்ளன[30]. சோழ மன்னர்களான **கோவிராஜகேசரி வர்மன், கோப்பரகேசரி வர்மன், கோப்பரகேசரி உத்தம சோழன், முதலாம் இராஜராஜன். முதலாம் இராஜேந்திரன், இரண்டாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராஜராஜன்** ஆகியோர் காலக் கல்வெட்டுகள் உள்ளன.

இராஜகேசரி வர்மனின் 3, 4, 15, 16 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும், பரகேசரிவர்மனின் 12, 14 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும், உத்தம்சோழனின் கல்வெட்டுகளும், முற்காலக் கல்வெட்டுகள். கி.பி 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மன்னன் பெயரிடப்படாத பல்வேறு கல்வெட்டுகளும் உள்ளன. இவற்றில் பல இக்கோயிலில் கட்டடப்பகுதிகள், கற்கள் ஆகியவற்றைக் கொடையளித்தது பற்றியும், துவார பாலகர்கள், தட்சிணாமூர்த்தி ஆகிய சிலைகள் அமைத்தது பற்றியும் கூறுகின்றன.

**முடிவுரை:**

திருவேள்விக்குடி கல்யாணசுந்தரேஸ்வரர் கோவில் சோழ மன்னன் ஆதித்த சோழன் (கி.பி. 907-971) காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் சோழர்கால சிற்பங்கள், கோயிற் சுவர்களில் காணப்படும் 52 கல்வெட்டுகள் போன்றவற்றின் மூலம் மன்னர்களின் வரலாறு, மிகச் சிறந்த சிற்பக்கலை, அழகுடன் அமைக்கப்பட்ட மண்டபங்கள், நேர்த்தியான கட்டடக்கலை மற்றும் கல்வெட்டுச் செய்திகள் போன்றவற்றின் மூலம் பிற்காலச் சோழகளின் வரலாற்றினையுன் கலை பண்பாட்டினையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இக்கோயிலில் சிவன் பார்வதி இருவருக்கும் திருமணம் நடைபெற்ற ஆதலால் நீண்ட நாட்கள் திருமணத் தடை உள்ளவர்கள் இக்கோயிலுக்குச் சென்று வழிபட்டால் திருமணத் தடை நீங்கும் புனித தலமாகவும் கருதப்படுகிறது.


**புகைப்படங்கள்:**





**கோயில் இராஜகோபுரம் அரிய ரிஷப அர்த்தநாரீஸ்வரர் வடிவம் திருக்கோயிலின் விமானத் தோற்றம்**





**இடையில் அரைஞான் தரித்து ஆடும் ஆடவல்லானின் அரிய திருமேனி**    **சண்டேச அனுக்கிரக மூர்த்தி**    **ஆடவல்லான்**



**இடையில் அரைஞான் தரித்து ஆடும் ஆடவல்லானின் அரிய திருமேனி**

## துணைநூற்பட்டியல்:

1. A.R.E No. 133 of 1926
2. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழகம் ஊரும் பேரும், முதற் பதிப்பு, 1946, பக் 392
3. திருவிளக்குடி புராணம், பக் 3
4. A.R.E No. 111 of 1926, SII XIII, No, 258
5. A.R.E No. 134 of 1926
6. A.R.E No. 116 of 1926 & S.R. Balasubramaniam, Early Chola Art, p.168
7. Ibid p.168
8. Ibid p.169
9. A.R.E No. 118 of 1926
10. A.R.E No. 123 of 1926
11. மா. சந்திரமூர்த்தி, அர. வசந்தகல்யாணி, திருவேள்விக்குடி ஸ்ரீமணவாளேஸ்வரர் திருக்கோயில் வரலாறு, பக் 14
12. வீ. சிவஞானம், திருஞானசமபந்தர் தேவாரம், முதல் பகுதி, பக் 572

13. பு. ஷண்முகமுதலியார், தேவார பதிகங்கள், பக் 136
14. பி.ரா. நடராஜன், பெரியபுராணம், இரண்டாம் பகுதி, பாடல் 190, பக் 255
15. பி.ரா. நடராஜன், பெரியபுராணம், நான்காம் பகுதி, பாடல் 121, பக் 57
16. பி.ரா. நடராஜன், பெரியபுராணம், மூன்றாம் பகுதி, பாடல் 290, பக் 136
17. பி.ரா. நடராஜன், பெரியபுராணம், மூன்றாம் பகுதி, பாடல் 291, பக் 136
18. இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற் கலைகள், பக் 45
19. மா. சந்திரமூர்த்தி, அர. வசந்தகல்யாணி, திருவேள்விக்குடி ஸ்ரீமணவாளேஸ்வரர் திருக்கோயில் வரலாறு, பக் 24
20. கோயில் ஆய்வும் நெறிமுறைகளும், அம்பை மணிவண்ணன், பக் 87
21. கி.ஸ்ரீதரன், ஆ.பத்மாவதி, அர.வசந்தகல்யாணி, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் 2004, பக் 147
22. S.R. Balasubramaniam, Early Chola Temples, pl.162
23. S.R. Balasubramaniam, Early Chola Temples, pl.226
24. மா. சந்திரமூர்த்தி, அர. வசந்தகல்யாணி, திருவேள்விக்குடி ஸ்ரீமணவாளேஸ்வரர் திருக்கோயில் வரலாறு, பக் 43
25. மேலது பக். 48
26. மீனாட்சி இராமன், கூர்ம புராணம், ஆலய வழிபாட்டு மஹோற்சவ தத்துவங்கள், பக் 10
27. மேலது பக். 10
28. மயிலை சீனி. வேங்கடசாமி, தமிழ் வளர்த்த அழகுக் கலைகள், பக் 23, மணிவாசகர் பதிப்பகம்
29. மா. சந்திரமூர்த்தி, அர. வசந்தகல்யாணி, திருவேள்விக்குடி ஸ்ரீமணவாளேஸ்வரர் திருக்கோயில் வரலாறு, பக் 53
30. கி.ஸ்ரீதரன், ஆ.பத்மாவதி, அர.வசந்தகல்யாணி, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் 2004, பக் 65-153